


கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை பெற்ற சிவக்குமார் மற்றும் அவரது மனைவி தீபாவுடன், மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குனர் பி.வி.ஏ.மோகன் தாஸ், இணை நிர்வாக இயக்குனர் பிரித்வி மோகன்தாஸ், டாக்டர் ஜார்ஜ் எம்.சாண்டி.

## மியாட் மருத்துவமனையில்

# கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

## டாக்டர்கள் சாதனை

சென்னை, பிப்.6: சினிமா தியேட்டரில் கேண்டீன் நடத்துபவருக்கு மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது.

மணப்பாக்கத்தில் உள்ள மியாட் இன்டர்நேஷனல் மருத்துவமனை, ₹35 கோடி செலவில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை பிரிவை கடந்த ஆண்டு தொடங்கியது. இங்கு பல்வேறு நாட்டு சர்வதேச மையங்களில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்த அனுபவ மிக்க டாக்டர்கள் பணிபுரிகின்றனர். இங்கு முதல்முறையாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை வெற்றிக்கரமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் காளிங்கராயன் பாளையத்தை சேர்ந்தவர் சிவக்குமார் (39). சினிமா தியேட்டரில் கேண்டீன் நடத்தி வருகிறார். இவரது மனைவி தீபா (33). இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர்.

சிவக்குமாருக்கு கடந்த ஆண்டு கல்லீரல் பாதிக்கப்பட்டது. அங்குள்ள தனியார் மருத்துவமனையில், உடனடியாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக சிவக்குமார் வந்தார். கல்லீரல் கிடைப்பதில் தாமதமானதால், திரும்பி சென்று விட்டார்.

இதற்கிடையில், திருச்சியில் மூளைச் சாவு அடைந்த ஒருவரின் கல்லீரல் தானம் தரப்படுவதாக தகவல் கிடைத்தது. ஈரோட்டில் இருந்த சிவக்குமார் உடனடியாக மருத்துவமனைக்கு வரவழைக்கப்பட்டார். கடந்த மாதம் 5ம் தேதி டாக்டர்கள் கல்லீரலை பெறுவதற்காக திருச்சி சென்றனர். மற்றொரு டாக்டர்கள் குழுவினர் சிவக்குமாரை அறுவை சிகிச்சைக்கு தயார் செய்தனர். திருச்சியில் இருந்து விமானம் மூலம் தானம் பெற்ற கல்லீரலை மியாட் மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர்.

அதன்பின், இரைப்பை, குடல், கல்லீரல் சிகிச்சை துறை இயக்குனர் டாக்டர் ஜார்ஜ் எம்.சாண்டி தலைமையிலான குழுவினர் சிவக்குமாருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தனர்.

இதுகுறித்து இணை நிர்வாக இயக்குனர் பிரித்வி மோகன்தாஸ், டாக்டர் ஜார்ஜ் எம்.சாண்டி கூறுகையில், ''திருச்சியில் இருந்து கல்லீரல் மருத்துவமனைக்கு வந்த அரை மணி நேரத்திற்குள், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை தொடங்கி விட்டோம். 99.9 சதவீதம் பாக்டீரியா இல்லாத அதிநவீன மாடுலர் ஆபரேஷன் தியேட்டரில் சுமார் 8 மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. சிவக்குமாருக்கு ₹15 லட்சம் செலவில் வெற்றிகரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர் நலமாக உள்ளார். இனி பழையபடி நன்றாக வாழலாம். மது பழக்கம், சர்க்கரை நோய், கொழுப்பு போன்றவற்றால், இவருடைய கல்லீரல் பாதிக்கப்பட்டது. இங்குள்ள இரைப்பை, குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சை மையத்தில் கல்லீரல் புற்றுநோய் உட்பட அனைத்து இரைப்பை, குடல் பாதை சார்ந்த நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது" என்றனர்.

நிர்வாக இயக்குனர் பி.வி.ஏ.மோகன்தாஸ் கூறுகையில், "இந்தியாவில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை சுமார் 25 ஆயிரம் முதல் 40 ஆயிரம் பேருக்கு தேவைப்படுகிறது. ஆனால் இதுவரை 750 முதல் 800 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் மட்டுமே நடந்துள்ளன. உலகில் உள்ள அனைத்து நவீன புதுமையான மருத்துவமும் சாதாரண மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் லட்சியம். அமெரிக்காவில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு ₹1.2 கோடி செலவாகிறது. இந்தியாவில், ₹20 லட்சம் முதல் ₹25 லட்சம் ஆகிறது. ஆனால், மியாட் மருத்துவமனையில் ₹15 லட்சம் முதல் ₹20 லட்சத்தில் சிகிச்சை அளிக்கிறோம்" என்றார்.

சிவக்குமார் கூறுகையில், "கடந்த ஒரு வருடமாக மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். ஒரு இட்லி கூட சாப்பிட முடியாது. உடனடியாக அறுவை சிகிச்சை செய்யாவிட்டால், 6 மாதத்தில் இறந்து விடுவார் என டாக்டர்கள் தெரிவித்தனர். ஏற்கனவே எனது நண்பர்கள் 5 பேர் உயிரிழந்துள்ளனர். என் மனைவி தீபாவிடம், குழந்தைகளை நன்றாக பார்த்துக்கொள். நான் இருக்க மாட்டேன் என்று கூட சொல்லிவிட்டேன். இப்போது எனக்கு புது வாழ்க்கை கிடைத்துள்ளது. பிரியாணி கூட சாப்பிடுகிறேன்'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

அப்போது மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், சிவக்குமாரின் மனைவி தீபா மற்றும் டாக்டர்கள் குழுவினர் இருந்தனர்.